**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC. 164/2021**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **முகமது ரபீ** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **முகமது அனிபா** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(12.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது வளையப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வழக்கறிஞராக சென்னை உயர்நீதிமன்றத்தில் பயிற்சி செய்து வருகிறேன். கடந்த 01.11.2020ம் தேதி இரவு 9.35 மணியளவில் எனது வீட்டிற்கு எதிரே உள்ள செட்டுக்கு பின்னாடி ஆஜர் 1 முதல் 3 எதிரிகள் மதுஅருந்திக் கொண்டிருந்தார்கள். எனது வீட்டின் வாசலில் முன்பு நானும் செந்தில்குமார், முத்துமணி ஆகியோர்கள் பேசிக் கொண்டிருந்தோம்.அப்போது எதிர்திசையில் இருந்த ஆஜர் 3 எதிரிகளும் அருவருக்க தக்க ஆபாச வார்த்தைகளை பொதுவாக பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அதை பார்த்து நான் ஆஜர் எதிரிகளிடம் அக்கம் பக்கத்தில் ஆட்கள் உள்ளார்கள். ஆபாசமாக பேசாதீர்கள் என்று நானும் செந்தில்குமாரும் சொன்னோம். அதற்கு எதிரிகள் நாங்கள் கிளம்பி விடுவோம் என்று சொன்னார்கள். பின்னர் கொஞ்ச நேரம் கழித்து ஆஜர் எதிரிகள் மது அருந்திவிட்டு எனது வீட்டிற்கு அருகில் வந்தார்கள்., அப்போது ஆஜர் எதிரி செந்தில்குமார் என்பவர் என்னிடம் நான் யாரு என்று தெரியுமா என்று சுன்னி என்று அசிங்கமான

வார்த்தையில் திட்டினார். அதற்கு நான் வக்கில் சார் கொஞ்சம் மரியாதையாக பேசுங்கள் என்று சொன்னேன் அதற்கு நீ எந்த புண்டையா இருந்தா எனக்கு என்ன என்று என் கன்னத்தில் முதலில் கையால் செந்தில்குமாரும் பின்னர் பிரசன்னாவும் அடித்தார்கள். என்னுடன் இருந்த சாட்சி செந்தில்குமாரும் முத்துமணியும் எதிரி சிவாவும் சண்டையை விலக்கிவிட்டார்கள். எதிரி சிவா சண்டையை விலக்கிவிட்டதால் எதிரிகளுக்குள் பிரச்சினை ஏற்பட்டு கைகலப்பு ஆகியது. அதன் பிறகு நான் 100க்கு போன் செய்து தகவல் சொன்னேன். போலிசாரும் வந்துவிட்டார்கள். பின்பு நாங்கள் அனைவரும் பெருங்குடி காவல் நிலையம் சென்றோம். பிரச்சினையின் போது 3 எதிரிகளும் நீ எப்படி இங்கு வாழ்கிறாய் என்று பார்ப்போம் என்றும் உன் குடும்பத்தோடு இங்கு வைத்து எறித்துவிடுவோம் என்றும் மிரட்டினார்கள். நாங்கள் இரவு 10.00 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். ஆனால் புகாரை போலிசார் வாங்கவில்லை. ஏனென்றால் எதிரி செந்தில்குமாரின் அப்பா பெருங்குடி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வந்துள்ளதாலும் எதிரி போலிசார் என்பதாலும் வாங்கவில்லை. மேலும் போலிசார் எதிரி செந்தில்குமார் ஏற்கனவே தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு தற்போது தான் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் அதனால் புகார் கொடுக்க வேண்டாம் என்று சமாதானம் சொன்னார்கள். நான் புகாரை பெற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தியதால் அன்று இரவு 2 மணிக்கு அங்குள்ள எழுத்தர் எனது புகாரை வாங்கினார். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான், அதில் உள்ள கையெழுத்தும் என்னுடையது. **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC. 164/2021**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | Caste | : |
| Father 's Name / Husband Name | : ராமராஜ் (எ) ராமதாஸ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(12.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது வளையப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2020ம் வருடம் 11 வது மாதம் தேதி ஞாபகம் இல்லை. நான் அப்போது வைஸ்பிரஸ்டன்டாக இருநத்தால் எங்கள் ஊரில் வசிக்கும் முத்துமணி என்பவருக்கும் அவரது மனைவிக்கும் கருத்து வேறுபாடு காரணமாக முத்துமணியின் மனைவி அவரது அம்மா வீடான வளையங்குளத்திற்கு சென்றுவிட்டார். முத்துமணி என்னை அழைத்துக் கொண்டு அவரது மனைவி வசிக்கும் வலையங்குளதிற்கு என்னை அழைத்து சென்றார். நானும் முத்துமணியும் வலையங்குளத்திற்கு சென்று முத்துமணியின் மனைவி மற்றும் அவரது அம்மாவுடன் பேசி உடன்பாடு ஏற்பட்டு நாளை அனுப்பி வைப்பி சொன்னதின் பேரில் நாங்கள் வலையப்பட்டிக்கு வந்து கொண்டிருக்கும் போது வழக்கறிஞர் ரபீக் என்பவர் அவரது வீட்டிற்கு முன்பு நின்று கொண்டிருந்தார். அப்போது என்னை அவர் கூப்பிட்டு ஒரு வார காலம் பகுதியில் தண்ணீர் வரவில்லை என்று என்னை கூப்பிட்டு பேசிக்கொண்டிருந்தார். அப்போது பெயர் தெரியாத

3 பேர் மது அருந்திக் கொண்டு அருவருக்க தக்க வார்த்தைகளை பேசிக் கொண்டு ஒரு 50 அடி தூரத்தில் இருந்தார்கள். அப்போது ரபீக் என்பவர் அவர்களிடம் சென்று அக்கம பக்கத்தில் ஆட்கள் உள்ளார்கள் அசிங்கமாக பேச வேண்டாம் என்று சொல்லியதற்கு அவர்களும் சரி என்று சொன்னார்கள். பின்பு கொஞ்ச நேரம் கழித்து அந்த 3 பேரும் நாங்கள் பேசிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்து நல்ல மதுபோதையில் எங்களிடம் நீங்கள் யாருடா அதை கேட்பதற்கு என்று சொல்லவும் ரபீக், அவரிடம் நான் வழக்கறிஞர் தான் பார்த்து பேசுங்கள் என்று சொன்னார். அதற்கு ஆஜர் எதிரி செந்தில்குமார் (அவரது பெயர் எனக்கு பின்னிட்டு தெரிய வந்தது. ) வழக்கறிஞர் என்றால் நீ என்ன ஆள்புண்டையா என்று அருவருக்க தக்க வார்த்தைகளை பேசினார்.

அவ்வாறு பேசிய போது எதிரிகளில் ஒருவர் (சாட்சி நாகசிவா என்பவரை அடையாளம் காட்டி) அவ்வாறு சண்டை போடக்கூடாது என்று சொன்னதாக சாட்சியம் அளிக்கிறார், பின்பு அவர்களுக்குள்ளாகவே சண்டை ஏற்பட்டது. பின்பு ரபிக்கும் எதிரிகளுக்கும் வாக்குவாதம் ஏற்படவே எதிரி செந்தில்குமார் ரபீகை கையை கொண்டு அடித்தார். பின்பு நான் போன் செய்து ஆட்களை கூப்பிடவும் ஆட்கள் வ ந்துவிட்டார்கள். ரபீக் 100க்குபோன் செய்தார். போலிசாரும் வந்துவிட்டார்கள். பின்பு போலிசார் எதிரிகளை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC. 164/2021**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **முத்துமணி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **அய்யாவு** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(12.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது வளையப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் காண்கிரிட் போடும் வேலை செய்து வருகிறேன். கடந்த 2020ம் வருடம் ஞாயிற்றுக் கிழமை எனது மனைவி வளையங்குளத்தில் இருந்ததால் நானும் செந்தில்குமாரும் வளையங்குளத்திற்கு சென்று விட்டு திரும்பும் போது வக்கில் சார் அவரது வீட்டு முன்பு நின்று கொண்டிருந்தார். நாங்களும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் 3 பேரும் மது அருந்திக் கொண்டு அசிங்கமாக பேசினார்கள். வக்கில் சார் அதை கேட்க நீ என்னடா கேட்கிற என்று சொன்னதும் எதிரிகளுக்குள் சண்டை வந்தது, நான் வீட்டிற்கு போய் விட்டேன். மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது மனைவியை பார்த்துவிட்டு வரும் போது சுமார் 10 மணி இருக்குமா என்றால் இருக்கும். வாக்குவாதம் நடந்ததாக சொல்லும் இடம் பெட்டிக்கடை அருகில் இருட்டுபகுதி என்றால் சரிதான். அவர்களுக்குள் வாக்குவாதம் வந்ததால் எனது மனைவியை கூட்டிக் கொண்டு வீட்டிற்கு

சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அதன் பிறகு நீதிமன்றத்திற்கு நேரடியாக வந்துவிட்டேன் என்றால் சரிதான். அ.சா.1 எங்கு புகார் கொடுத்தார் என்ன செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**. இல்லை